புனித அந்தோனியார் கல்லூரி
ஊர்காவற்றுறை.

# பரிசளிப்பு விழா

20.09.2012

வியாழக்கிழமை, காலை 09.30மணி

பிரதம விருந்தினர்

**திரு.நீக்கிலாப்பிள்ளை ஜோசப் அன்ரன்**
பொறியியலாளர் – நியூசிலாந்து

**திருமதி.அன்ரனற் நிர்மலா அன்ரன்**
ஓய்வுபெற்ற ஆசிரியர் – புனித பெனடிற் கல்லூரி, கொழும்பு

கௌரவ விருந்தினர்

**திரு.தியாகலிங்கம் சோமசேகரம்**
(கோட்டக்கல்வி அதிகாரி, ஊர்காவற்றுறை)

தலைவர்

**அருட்திரு க. ஜேம்ஸ் சிங்கராயர்**
அதிபர்

## நிகழ்ச்சி நிரல்

- பிரதம விருந்தினர்களை, கௌரவ விருந்தினரை பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துவரல்
- தேசிய கொடியேற்றல் - தேசிய கீதம்
- பாடசாலைக் கொடியேற்றல் - பாடசாலைக் கீதம்
- வரவேற்பு நடனம்
- மங்கல விளக்கேற்றுதல்
- இறைவணக்கம்
- வரவேற்புப்பாடல்
- வரவேற்புரை – செல்வன். ம. ஆனல்ட் சரண்சன்
- அதிபர் அறிக்கை
- பந்து நடனம்
- கௌரவ விருந்தினர் உரை
- கிராமியப் பாடல்
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில்கள் வழங்கல்
- புஸ்பாஞ்சலி
- நன்றியுரை – திரு. ந. சசிக்குமார்
- தமிழ்த் தாய் வாழ்த்து

**இறைவணக்கம்**

இறைவணக்கம் இனிதாய்ப்பாடி
இறைவா உம்பெயர் புகழ்கின்றோம்
சங்கமமாகி சபைதனில்வாரும்
சரணம் சரணம் இறைவனே (2)

உலகாளும் இறைவா உறவாடவருவாய் - எம்
உணர்வோடு இன்றும் அவைதனில் அமர்வாய்
சக்தியும் நீயே
சாந்தியும் நீயே } 2
சரணம் சரணம் திருவடி சரணம்
உலகம் அமைதிபெற உண்மை உயர்வு பெற
விரைவாய் வருவாய் பரமனே
எமது பணி சிறக்க கல்லூரி உயர்வடைய
வரம் பல அருள்வாய் வேந்தனே

காக காக பகரிக ரிக ரிரிஸா
ரீரிரீரி கரிஸக ரிஸ கரிஸா
ஸஸாஸ ககாக மமாம பபாப
ஸாஸ ரீரி கரிஸா ஸரிகரிஸ

இருளினை அகற்றி ஒளியினை ஏற்ற - எம்
இதயத்திற் கென்றும் மெஞ்ஞானம் தருவாய்
வழியும் நீயே
வாழ்வும் நீயே } 2
சரணம் சரணம் உனதடி சரணம்
உலகம் அமைதிபெற உண்மை உயர்வு பெற
விரைவாய் வருவாய் பரமனே
எமது பணி சிறக்க கல்லூரி உயர்வடைய
வரம் பல அருள்வாய் வேந்தனே

**வரவேற்புப்பாடல்**

இராகம் : ஹிந்தோளம்

அந்தோனி குடும்பத்தின் பரிசில் நாளாம்
சிறப்போடு நாமெல்லாம் மகிழும் திருநாளாம்

தீவகம் பெற்றெடுத்த பொறியியலாளனே
புவனம் புகழ் ஜோசப் அன்ரனி பாரியாரே
பணிகள் பற்பல செய்திட நியூசிலாந்தில்
சுடர் விட்டொளிரும் ஜோதியே வருகவே

தங்கு தடையின்றி கல்வி வளம் பெருக்கும்
கோட்டக் கல்விப் பணிப்பாளரே
கடமைகளை அர்ப்பணிப்புடன் செய்யும் கண்ணியனே
வருக வருகவென வாழ்த்துகின்றோமே

அந்தோனி குடும்பத்து அருட்பணி ஆயனே
ஜேம்ஸ் எனும் ராஜனே இனிய முதல்வனே
கல்வி கலையோடு ஆன்மீக அமுதத்தை
அள்ளி வழங்கிடும் வள்ளலே வருகவே!

சேவையில் உயர்ந்த ஏணியே, தோணியே!
கல்விப் பாதையினை காட்டிடும் ஆசான்களே!
பல நலம் பெற்று நீர் பாங்காய் வாழ்ந்திட
அந்தோனி பாதங்களில் படைக்கின்றோம் வருகவே!

கல்வி அதிகாரிகளே, அதிபரே, பெற்றோரே!
பழைய மாணவரே பண்புசால் பெரியோரே
நல்வரவு சொல்லி நமஸ்காரம் செய்தே
வருக வருகவென வாழ்த்துகின்றோமே.

## வரவேற்பு நடனப்பாடல்

வருக வருகவே! வருக வருகவே!
வருக வருக வந்து நல்ல
ஆசி தருகவே வருக வருகவே

அந்தோனியார் குடும்பத்து பழைய மாணவரே
நியூசிலாந்து நாட்டின் பொறியியலாளராய் கடமை புரியும்
நீக்கிலாப்பிள்ளை யோசப் அன்ரன் அவர்களே அவர் தம்
பாரியாரே
வருக வருகவே

காரை நகரில் வேரூன்றி கடமை தவறாது
காவலூரில் பணிபுரியும் கோட்டக் கல்விப் பணிப்பாளரே

கல்லூரிதனில் கலை விளக்காய் காலமெல்லாம் பணிபுரியும்
எம் இனிய முதல்வரே வருக வருகவே

கல்லூரிதனில் மாணவர் எம்
கல்விதனில் அக்கறையில் ஊக்கமுடன் பணியாற்றும்
ஆசான்களே வருகவே

பரிசுதின வைபவத்தில்
கலந்து கொள்ளும் அனைவரையும்
அன்புநிறை சிந்தையுடன்
பண்பொழுக வரவேற்போம்.

2011ம் ஆண்டிற்கான அதிபரின் அறிக்கை

தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் தலைநிமிர் கழகமாக நின்று கோளமெங்கும் ஓங்கிப் புகழ் பரப்பி வரலாற்றுச் சாதனைகள் பல படைத்துவரும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் 2011ம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவுக்கு, முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும், கல்லூரியின் பழைய மாணவரும், நியூசிலாந்தில் பொறியியலாளராகவும் பணியாற்றும் உயர்திரு. நீக்கிலாப்பிள்ளை யோசவ் அன்ரன் மற்றும் அவர் தம் துணைவியார் திருமதி. அன்ரனற் நிர்மலா அன்ரன் அவர்களே,

கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ள ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. தியாகராஜா சோமசேகரம் அவர்களே,

தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களே,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே,
உதவிக் கல்விப் பணிப்பாளர்களே,
ஆசிரிய ஆலோசகர்களே,
அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே,
அயற்பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே,
பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே,
எமது பிரதேசத்திலுள்ள நிறுவனங்களின் தலைவர்களே,
பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே,
பெற்றோர்களே, நலன் விரும்பிகளே,
எனது அன்பான ஆசிரியர்களே, கல்விசாரா ஊழியர்களே,
அன்புநிறை மாணவச் செல்வங்களே,

உங்கள் அனைவருக்கும் அன்பான இனிய வணக்கங்கள் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். 140 ஆண்டுகளைக் கடந்து ஆய்ந்து புனைந்த நல்லறிவை நாள்தோறும் புகட்டும் கல்லூரி அன்னை இன்று புத்தணிகளை அணிந்து பூரித்து நிற்கின்றாள். உங்கள் ஒவ்வொருவரதும் வரவை நினைந்து வியந்து நிற்கின்றாள். அறிவொளி பரப்பும் எமதன்னை இன்று கம்பீரமாக காட்சி தருவது பெருமகிழ்ச்சி

அளிக்கிறது. என்றுமே உடைக்க முடியாத உறவுப் பாலத்தைப் புதுபிக்கும் உங்களை, உவகை பொங்க வரவேற்கின்றேன். ஊர்காவற்றுறை தீவகற்பத்தின் முதுபெரும் கல்விக் கூடமானது 140 ஆண்டுகள் சேவையை பூர்த்தி செய்து நிற்கும் இத்தருணத்தில் 2011ம் ஆண்டிற்கான அதிபர் அறிக்கையினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய பரிசளிப்பு நன்னாள் கல்லூரி வரலாற்றின் பொன்னாள். எமது கல்லூரிப் பண்பாட்டினதும் அறிவுத் திறனினதும் நிலைக்களனாக விளங்கும் உன்னத நாள். இன்றைய பரிசளிப்பு விழாவில் எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களை வழங்கிப் பாராட்ட இங்கு வருகை தந்திருக்கும், கல்லூரியின் பழைய மாணவரும் பொறியியலாளருமான உயர்திரு. நீக்கிலாப்பிள்ளை யோசவ் அன்ரன் அவர்களும் அவர்தம் பாரியார் திருமதி. அன்ரனற் நிர்மலா அவர்களும் முதன்மை விருந்தினர்களாக வருகை தந்தமையால் கல்லூரி அன்னை பெருமையும் மகிமையும் அடைகின்றாள். எங்கள் அன்பான அழைப்பை ஏற்று பல சவால்கள் மத்தியில் பெருவிருப்புடன் வந்துள்ள உங்களை பெருமகிழ்வுடன் வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். திரு. நீ. யோசவ் அன்ரன் அவர்கள், சப்த தீவுகளின் ஒன்றான ஊர்காவற்றுறை கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்டு இடைநிலைக்கல்வி க.பொ.த சாதாரணதரம் வரை இங்கு கற்று பலரின் பாராட்டுக்களைப் பெற்று பின்னர் உயர்தர கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டீர்கள். அங்கு இயந்திரவியல் பொறியியலாளராகப் பட்டம் பெற்று வெளியேறினீர்கள்.

தகுதி, திறமை, சிந்தனை என்பவற்றை நிறையவே கொண்டுள்ள நீங்கள், இலங்கை அரச திணைக்களங்களில் பொறியியலாளராக பல ஆண்டுகள் பணியாற்றினீர்கள். அதன் பின்னர் தங்களிடம் சலியாத உழைப்பையும் எடுத்த காரியத்தை தொடுத்து முடிக்கும் முயற்சியையும் கண்டு, பிறவுண்ஸ் கம்பனியும் அழைக்க, உங்கள் சேவையை அங்கு தொடர்ந்தீர்கள். தங்களின் வினைத்திறனையும் செயலாற்றலையும் கண்ட பன்னாட்டு நிறுவனமொன்றின் அழைப்பினை ஏற்று நியூசிலாந்து சென்று பிரபல்ய உருக்கு நிறுவன கட்டுமான பணியியல் இணைந்து தொடர்ந்து அந்த நிறுவனத்திலேயே பொறியியலாளராகப் பணியாற்றும்

வாய்ப்பையும் பெற்றுக்கொண்டீர்கள். இதற்கு உங்களின் திறமையும் அர்ப்பணமிக்க சேவையுமே காரணங்களாகும் என்று கூறிக்கொள்வதிலே கல்லூரித் தாய் பெருமையடைகின்றாள். கல்லூரியின் பழைய மாணவனாகிய தாங்கள் கல்லூரி அன்னையை பற்றுறுதியுடனும் பாசப்பிணைப்புடனும் நேசித்து வருகின்றீர்கள். தங்களின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் எதிர்காலத் தலைமுறையினருக்கு நல்வழிகாட்டும் என்பதில் நாம் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளோம்.

பரிசளிப்பு விழா மேடையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் திருமதி அன்ரனற் நிர்மலா அன்ரன் அவர்களே, தாங்கள் தங்களின் கணவனை உருவாக்கிய கல்லூரிக்கு வருகை தந்திருப்பது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். ஓய்வுபெற்ற ஆசிரியராகிய நீங்கள் கல்விப்புலத்திற்கு புதியவரல்லர். கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரியில் ஆசிரிய பணியாற்றி, பின்னர் கணவருடன் நியூசிலாந்தில் குடியேறி, இரு புதல்விகளுக்குத் தாயாகி அவர்களை கல்வியில் உயர்வடைய வைத்து பட்டங்கள் பெற்று வாழ்வில் முன்னேற வழிசமைத்த தாங்கள் பாராட்டப்பட வேண்டியவராவர். இவ்வேளையில் தங்கள் கைகளிலிருந்து பரிசில்களைப் பெறும் மாணவர்கள் தங்களைப் போன்று கல்வியின் சிகரத்தை எட்டிப்பிடிக்க முனைவார்கள் என்பது திண்ணம். எங்களின் அழைப்பிற்கு இசைந்து இங்கு வருகை தந்தமைக்கு நன்றி கூறுவதுடன் இறையாசீரும் துணையும் உங்களுக்கு நிறைவாகக் கிடைக்க இறையருள் வேண்டுகிறேன்.

கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் திருவாளர் தியாகராஜா சோமசேகரம் அவர்களே, யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற காரைநகரில் பிறந்து ஆரம்பக் கல்வியை யா/வியாவில் சைவ வித்தியாலயத்தில் கற்று இடைநிலைக் கல்வியை யா/யாழ்ற்ரன் கல்லூரியிலும் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றீர்கள். 1979ல் உதவி ஆசிரியராக இரத்தினபுரி லெல்லோபிற்றியாவில் ஆசிரியப்பணியைத் ஆரம்பித்தீர்கள். அதன்பின்னர் யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராக பதவியுயர்வு பெற்றீர்கள். தொடர்ந்து தங்களின் அயராத உழைப்பின் பயனாக யாழ்மாவட்டம் கணித மூலவளநிலைய பொறுப்பாளராக நியமனம் செய்தது. 1992 – 1993

காலப்பகுதியில் கணித ஆசிரிய ஆலோசகராக கோப்பாய் கல்விக் கோட்டத்தில் பணியாற்றினீர்கள். கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றத் தொடங்கி இறுதியாக காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய வேளை 2010ல் ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்று தற்போதும் சிறப்பாக பணியாற்றி வருகின்றீர்கள். ஊர்காவற்றுறை கல்விக் கோட்ட பாடசாலைகளின் கல்விப்பயிர் வளர்க்கும் காவலனாக செயற்பட்டு வருகின்றீர்கள். தாங்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 1ஐச் சேர்ந்தவராக விளங்குவதுடன், நிர்வாகத்திறனும் கடமையுணர்வும் கொண்டு, நாளும் பொழுதும் அயராது பணியாற்றும் சிறந்த சேவையாளராகத் துலங்குகின்றீர்கள். தங்களுடைய எளிமையான செயற்பாடுகளும் அனைவரையும் அன்புடன் வரவேற்கும் பண்பும் தாங்கள் மென்மேலும் உயர்வடைய துணையாக இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. எமது அழைப்பை ஏற்று பல வேலைப்பளுக்கள் மத்தியில் இங்கு வருகை தந்தமைக்கு நன்றி கூறுவதுடன், தங்களின் சேவைகளை இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பதுடன் இறையருள் தங்களுடன் என்றும் இருக்க இறைவனை வேண்டுகிறேன்.

## மாணவர் விபரம்

2011ல் கல்லூரியின் மாணவர் தொகை 468 ஆக இருந்ததுடன், க.பொ.த. உயர்தரத்தில் 48 மாணவிகள் கல்வி கற்றுவருகின்றனர். உயர்தரத்தில் பல மாணவிகள் கல்லூரியில் வந்து இணைந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். நீண்ட போரின் பின்னர் எமது பிரதேச மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் மாணவர் தொகை தொடர்ந்தும் ஒரே மட்டத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆசிரிய ஆளணி

2011ல் எமது கல்லூரியில் 27 நிரந்தர ஆசிரியர்களும் 02 ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்களும், 02 உதவி ஆசிரியர்களுமாக 31 பேர் சேவையாற்றி வந்தனர். இவர்களில் செல்வி ச.தியாகலிங்கம், திருமதி ச.பிரபாசன், திரு. வீ. ரங்கநாதன், திரு. யோ. இ. ஜெயகாந்தன், திருமதி. வ. செல்வசீலன், திரு.ச.பரந்தாமன்

ஆகியோர் வேறு பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் பெற்று முழுநேரமாகவும், சித்திரபாட ஆசிரியர் திரு. செ. செந்தில் பகுதி நேரமாகவும் எம்முடன் 2011ல் இணைந்து கொண்டவர்களாவர். திரு.த.வரோதயன், செல்வி. ல. இரட்ணசபாபதி ஆகியோர் ஒப்பந்த அடிப்படையில் புதிதாக நியமனம் பெற்றவர்களாவர். அத்துடன் திருமதி. சோ. அருள்தாஸ், திருமதி. சி. ஜெயகாந்தன், செல்வி ஜெ. முத்துகுமாரு ஆகியோர் தற்காலிக இணைப்பில் எமது கல்லூரியில் இணைந்து பணியாற்றினார்கள். உதவி அதிபர் அருட்திரு. றொபின்சன் ஜோசவ் அடிகளார் அவர்கள் தனது மேற்படிப்பிற்காக லண்டனுக்கு கற்கை விடுமுறையில் சென்றிருந்தார். திருமதி. இ. மோகனதாஸ் அவர்கள் திருமணம் முடித்து பணியில் இருந்து விலகியவராக இங்கிலாந்து சென்றுள்ளார்.

இதே வேளை எமது கல்லூரியின் நிரந்தர ஆசிரியரான திருமதி சி. திருமாறன் நூலக பொறுப்பசிரியராக கடந்த 6 வருடங்கள் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். திரு. இ. ஜெனால்ட் அன்ரனி அவர்கள் வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகராக தீவக வலயத்திற்கு நியமனம் பெற்றுச் சென்றுள்ளார். இவர்கள் ஆற்றிய சேவைகளுக்கு கல்லூரிக்குடும்பம் சார்பில் உளமார்ந்த நன்றிகளைக் கூறுவதோடு, செல்லும் இடங்களில் சிறப்பாகப் பணியாற்றி பல்புகழையும் பெறவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

2011ல் எமது நிரந்தர ஆசிரிய ஆளணியில் 08 பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெற்ற பட்டதாரிகள் உட்பட 21 பட்டதாரிகளும் 08 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் 2 உதவி ஆசிரியர்களும் சேவையில் இருந்துள்ளனர்.

## கல்விசாரா ஊழியர்கள்

தற்போது எமது கல்லூரியில் பாடசாலைக் காவலாளி ஒருவரும், ஆய்வுகூட உதவியாளர் ஒருவரும் சேவையாற்றி வருகின்றனர். எமது கல்லூரியின் அலுவலக உதவியாளர் திரு. X. M. புறோகியர் தொடர்ந்தும் கோட்டக் கல்விப் பணிமனையிலேயே இணைக்கப்பட்டு அங்கு பணியாற்றிவருகின்றார். இவ்வெற்றிடமும் அமரத்துவம் அடைந்த

அலுவலக உதவியாளர் திரு. செபஸ்ரியாம்பிள்ளையின் வெற்றிடமும் இதுவரை நிரப்பப்படவில்லை. இது எமது நாளாந்த நிர்வாகப் பணிகளை முனைப்புடன் செயற்படுத்த பாரிய தடையாக உள்ளதை பல்வேறு நிலைகளில் உள்ளவர்களுக்கு எடுத்துக் கூறியும், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதுள்ளமை மேலும் கவலையளிப்பதாகவே உள்ளது.

பெரும்பாலான ஆசிரியர்கள் தினமும் நீண்டதூரம் பிரயாணம் மேற்கொண்டு இங்கு வந்து கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றனர். தமது குடும்பச் சுமைகளுடன் பல சவால்களை எதிர்கொண்டு கல்வியூட்டுதலை தமது மேலான சேவையாகக் கருதி, குறைந்த வேதனத்திலும் இங்கு பணியாற்றிவரும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பை நாம் எப்போதும் நன்றியுடன் நோக்குகின்றோம். பல இடர்கள் மத்தியில் அரும்பணியாற்றிவரும் இவ் ஆசிரியர்களையும் கல்விசாரா ஊழியர்களையும் இவ்விடத்தில் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

## கல்வி அபிவிருத்தி

க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர பெறுபேறுகள் தொடர்ந்தும் சிறப்பாகக் காணப்பட்டன. 2011 டிசம்பரில் இடம்பெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 46 வீதமானோர் உயர்தரத்தில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். உயர்தரப்பரீட்சையில் 2011ல் தோற்றியோரில் 95 வீதமானோர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளதோடு 2A,B சிறந்த பெறுபேறாகவுள்ளது. இவர்களில் செல்வி.இ.சுபாஜினி, செல்வன்.அ.ப.பபில்ராஜ் ஆகியோர் கலைத்துறைக்கும், செல்வி. ம தர்மிகா வணிகவியல் துறைக்கும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்படக்கூடிய தகைமையைப் பெற்றமையும், அரசியல் விஞ்ஞான பாடத்தைத் தவிர ஏனைய சகல பாடங்களிலும் சகல மாணவர்களும் 100 வீதம் சித்தியடைந்தமையும் கல்லூரியின் கல்வியடைவின் உயர்விற்கு சான்றாக அமைந்துள்ளன. இவ்வாண்டு இசற்(Z) புள்ளியில் ஏற்பட்டுள்ள குழப்பங்களினால் அதிக மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் மேலும் பல மாணவர்கள் பல்கலைகழக வாய்ப்பு பெறக்கூடிய நிலையில் உள்ளனர்.

2011ல் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான கணித பாடத்தில் விசேட செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டு வந்தன. இச் செயற்றிட்டம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதே போன்று விஞ்ஞான பாடத்திலும் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டமை மற்றும் எமது விஞ்ஞான ஆய்வு கூடத்தின் உச்சப்பயன்பாடு விஞ்ஞானபாட பெறுபேறுகள் 57 வீதமாகவும் கணிதபாட பெறுபேறுகள் 46 வீதமாகவும் உயர்ந்து காணப்பட ஏதுவாகின. அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாடகமும் அரங்கியலும், சங்கீதம், சைவநெறி மற்றும் கடல்வளம் ஆகிய பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மாணவர்கள் 100% சித்தி பெற்றுள்ளமையையும் இங்கு குறிப்பிட வேண்டும். அத்துடன் தமிழ், சமயம், ஆகிய பாடங்களுக்குரிய சித்தி வீதமும் உயர்ந்துள்ளது. மேற்படி பாடங்களை கற்பித்த ஆசிரியர்களை இவ்விடத்தில் சிறப்பாக பாராட்டுகின்றேன்.

2011ல் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் உயர்தர மாணவர்களுக்கு வழங்கப்படும் சிப்தொற புலமைப் பரிசிலில் 10 மாணவர்கள் புதிதாக இணைந்து கொண்டனர். அத்துடன் சனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் பெற 19 மாணவர்கள் தகுதிபெற்றனர். இவற்றைப் பெற்றுக் கொள்ள உதவிபுரிந்த தீவக வலயக்கல்விப்பணிப்பாளருக்கும் விண்ணப்படிவங்களை சேகரித்து அனுப்பி வைப்பதற்கு பொறுப்பாக இருந்த ஆசிரியை திருமதி. அ. சிவாஸ்காந்தன் அவர்களுக்கும் நன்றிகள்.

## கணினி நிலையம்

எமது மாணவர்கள் கணினி நிலையத்தை நன்கு பயன்படுத்தி, கணினி மென்பொருள் சம்பந்தமான புதிய ஆக்கங்களை அதிகமாக உருவாக்கி உயர்நிலையடைய வேண்டும் என்பது எமது இலக்காகும். கணினி நிலையத்திற்கு நீண்ட காலமாக பெற்றுக் கொள்ளப்படாதிருந்த தளபாடங்களையும் (19 மேசை, 28 கதிரை) 2011ம் ஆண்டில் பெற்றுக் கொண்டோம். மேலும் 5 புதிய கணினிகளையும் அதற்கான தரவு

பரிமாற்ற கருவியையும் (Network connection) பல்ஊடக தெறி கருவி (Multy Media Projector) ஒன்றையும், 2 அச்சுப்பதிப்பான்கள் (Printers) EKSP திட்டத்தின் கீழ் பெற்றுக்கொண்டோம். தரம் 6 – 13 வரையான சகல மாணவர்களுக்கும் கணினி கற்பித்தல் இடம்பெறுவதுடன் கணினி மென்பொருள் ஆக்க போட்டிகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றனர். மேலும் எமது கல்லூரி பாடசாலைகளின் வலையமைப்பில் இணைக்கப்பட்டு தனக்கென்று பிரத்தியேகமான வலையமைப்பை Website - www.kaytsantonys.sch.lk. கொண்டுள்ளமை எமது கணினி வளவிருத்திக்கான சான்றாகும். கணினி நிலைய பொறுப்பாசிரியாராக இருந்து செயற்படும் திரு. L.I. றோகான் அவர்களுக்கு எனது நன்றிகளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## நூல் நிலையம்

மாணவர்களின் கல்வியறிவு வளர்ச்சியில் அரிய பங்காற்றி வருவது நூல்நிலையமாகும். 2011ல் எமது நூல்நிலையத்திற்கு தேவையான வாசக தளபாடங்களைப் பெற்றுக்கொண்டோம். இதற்கு ஆதரவு வழங்கிய தீவக வலயத்தின் வலயக்கல்விப்பணிப்பாளருக்கும், திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப்பணிப்பாளருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்களின் நேரசூசியில் நூலகத்திற்கு ஒதுக்கபட்ட பாடவேளைக்கு மேலதிகமாக நூலக பாவனையை அதிகரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக புத்தகப் பெட்டி (Books Box), வாசிப்புப் போட்டி, இடைவேளையின் போது பத்திரிகை வாசிப்பு போன்றன மாணவர்களின் வாசிப்பு ஆற்றலை அதிகரிக்கும் செயற்பாடுகளாகும். தற்போது நூலகத்தில் 2930 நூல்கள், 26 சஞ்சிகைகள் உள்ளன. கடந்த ஆண்டு 15 நூல்கள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டன. 583 புதிய நூல்களும் இணைக்கப்பட்டன. நூலகத்திற்கு பொறுப்பாசிரியராக இருந்து உயர்ந்த தரத்தில் அதனைப் பேணி ஒழுங்கமைப்பைச் செய்த நூலக ஆசிரியர் திருமதி. சி. திருமாறன் அவர்களுக்கும் உதவிகள் புரிந்த செல்வி. யோ. பு. தர்சினி அவர்களுக்கும் உளமார்ந்த நன்றிகள்.

## இணைப்பாட விதான செயற்பாடுகள்

### தமிழ்தினப் போட்டி

2011ல் தமிழ்த்தனப் போட்டியில் பல மாணவர்கள் வலயமட்ட மாவட்டமட்ட போட்டிகளில் கலந்து கொண்டனர். திறந்த போட்டியான இசைநாடகப்போட்டியில் எமது கல்லூரி மேடையேற்றிய "சத்திவான சாவித்திரி" இசைநாடகம் மாவட்டமட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது. இதனை நெறிப்படுத்திய திருமறைக்கலாமன்ற கலைஞர் திரு. தைரியநாதர் அவர்களுக்கும் பொறுப்பாக இருந்த அருட்திரு. றொபின்சன் ஜோசவ் அடிகளாருக்கும், ஆசிரியர்களான திரு. கீ. கியோமர், செல்வி ந. கந்தலீலா அவர்களுக்கும் பங்குபற்றிய மாணவர்களுக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஆங்கிலதினப் போட்டி

2011ல் ஆங்கில தினப் போட்டியில்பல மாணவர்கள் கோட்ட, வலய, மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தார்கள். எமது கல்லூரியின் கீழ்ப்பிரிவு மாணவர்களினால் மேடையேற்றப்பட்ட "Reward for Kindess" எனும் நாடகம் கோட்டமட்டத்திலும் வலய மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றதோடு மாகாண மட்டப் போட்டியிலும் பங்குபற்றியமை ஆங்கிலத்தில் எமது மாணவர்களின் திறமையையும் முயற்சியையும் வெளிப்படுத்தி நிற்கின்றது என்றால் மிகையாகாது. மேலும் திறந்த நாடகப் போட்டியில் எமது மாணவர்களால் மேடையேற்றப்பட்ட "Mercy of God" எனும் நாடகமும், மேற்பிரிவு மாணவர்களால் மேடையேற்றப்பட்ட "Triumph" எனும் நாடகமும் கோட்ட மட்டத்தில் 1ம் இடங்களையும், வலய மட்டத்தில் 2ம் இடங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உடற்பயிற்சி அணி

விளையாட்டுத் துறையில் எமது மாணவர்கள் தொடர்ந்தும் தேசிய மட்டத்தில் முன்னிலையில் இருந்து செயல்பட்டு வருகின்றனர் என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 2011ல் 30 மாணவர்களைக் கொண்ட உடற்பயிற்சி அணி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டது. இம்மாணவர்களையும் இதற்குப் பொறுப்பாளராக இருந்த உப அதிபர் அருள்திரு அ.றொபின்சன் ஜோசவ் அவர்களிற்கும், பயிற்றுவிப்பாளர்களாக இருந்த திரு. ம. சுயாந்த் மற்றும் திரு. உ. றோகன்ராஜ் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்களுக்கான பாராட்டுவிழா 2011.10.21ம் திகதி மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக வடமாகாண கௌரவ ஆளுனர் உயர்திரு. G. சந்திரசிறீ அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உயர்திரு. இளங்கோவன் அவர்களும், மாகாண கல்விப்பணிப்பாளர் உயர்திரு. ப. விக்னேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## இல்லமெய்வல்லுநர் போட்டிகள்

2011.02.19ல் இல்லமெய்வல்லுநர் போட்டி சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. இமல்டா சுகுமார் அவர்கள் கலந்து சிறப்பித்தார். பொஸ்கோ இல்லம் முதன்மையிடத்தைப் பெற்றுக்கொண்டது.

## பெரு விளையாட்டுக்கள்

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் மென்பந்து துடுப்பாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் எமது அணிகள் சிறப்புடன்

விளையாடி வருதோடு மாவட்டமட்டம் வரை சென்று போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளையும் பெற்றுள்ளன.

## உள்ளக விளையாட்டுக்கள்

உள்ளக விளையாட்டுக்களில் பூப்பந்தாட்டம் மற்றும் சதுரங்கம் போன்றவற்றில் இவ்வருடமும் மாவட்ட மட்டத்திற்கு சென்று பங்குபற்ற எமது அணிகள் தகுதி பெற்றிருந்தமையை இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இவற்றில் நாம் இன்னும் கடுமையான பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ளதையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். விளையாட்டுத்துறைக்கு பொறுப்பாக இருந்து சிறப்பாக அதன் செயற்பாடுகளை முன்னெடுத்த ஆசிரியர் திரு. கீ. கியோமர் அவர்களுக்கு நன்றிகளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## மதிய உணவு

உலக உணவுத்திட்டத்தின் கீழ் தரம் 6 - 9 மாணவர்களிற்கு மதிய உணவு வழங்கும் திட்டம் தொடர்ந்தும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பழைய மாணவர் சங்கங்களின் உதவியோடு தரம் 10 - 13 மாணவர்களுக்கும் இத்திட்டத்தை தொடர்ந்தும் அமுல்படுத்தி வருகின்றோம். வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பெரும்பான்மையான மாணவர்கள் உள்ள எமது கல்லூரிக்கு இத்திட்டம் உண்மையிலேயே மிகவும் பயனுள்ள திட்டம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மதிய உணவு வழங்குவதற்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்ட ஆசிரியர்கள் திரு. செ. பரராஜசேகரம் மற்றும் செல்வி. கோ. பத்மினி ஆகியோருக்கும் உதவியாளராகச் செயற்பட்ட திரு. யோ. ராஜ்குமார் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றிகளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## பரிசளிப்பு தினம்

2011ம் ஆண்டிற்கான பரிசளிப்பு தினம் 03.11.2011 அன்று சிறப்பாக நடைபெற்றது. அறிவுசார் சமுகத்திற்கான வடமாகாணகல்விச்

செயற்றிட்ட முகாமையாளர் திரு. S. T. பீரிஸ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தார். சிறந்த அடைவு பெற்ற மாணவர்களுக்கு பரிசு வவுச்சர்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதற்கான நிதியை கனடா அன்ரோனியன் நிதியத்திலிருந்து (Antonian Trust Canada) பெற்றுக்கொண்டோம்

## மன்றங்கள்

எமது கல்லூரியில் இயங்கிவரும் தமிழ் இலக்கிய மன்றம், ஆங்கில இலக்கிய மன்றம், உயர்தர மாணவர் மன்றம், கத்தோலிக்க மாணவர் மன்றம், இந்து மாணவர் மன்றம், சாரணியம், சென் ஜோண்ஸ் அம்புலன்ஸ் போன்றவை தொடர்ந்தும் மாணவர் ஆளுமை விருத்தியிலும், பொதுச் சேவை செய்வதிலும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. இவை, மாதத்தில் இருநாட்களில் பொதுக் கூட்டங்களை நடத்தியதோடு, ஒளிவிழா, சரஸ்வதி பூசை போன்ற முக்கிய நிகழ்வுகளையும் சிறப்பாக நடத்தியிருந்தன. எமது சுற்றாடலை சிறந்தமுறையில் பேணவும் மாணவரிடம் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவுமென சுற்றாடல் குழு எமது கல்லூரியில் அமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. இவற்றிக்கு பொறுப்பாக இருந்து வழிநடத்தும் பொறுப்பாசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

## பழைய மாணவர் சங்கங்கள்

பல்வேறு நாடுகளில் வசித்துவரும் எமது பழைய மாணவர் சங்கங்கள் எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்து வருகின்றனர். கனடாவில் இயங்கிவரும் பழைய மாணவர் சங்கம் (St.Antony's College Kayts Alumini Association, Canada)கடந்த ஆண்டு புதுப்பிக்கப்பட்டு திரு. தோமஸ் இரட்ணசாமி அவர்களின் தலைமையில் புதிய நிர்வாகக்குழு அமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. வருடாந்தம் நடைபெற்று வரும் பரிசளிப்பு தினத்திற்கான உதவிகளை வழங்கி வருவதோடு, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அன்றாட செயற்பாடுகளிற்கான நிதி உதவிகளையும் வழங்கிவருகின்றது. இச்சங்க உறுப்பினர்களால் நிறுவப்பட்டுள்ள நம்பிக்கை நிதியம் 2011ல் ரூபா 100,000.00 கல்லூரித் தேவைக்காக அன்பளிப்புச் செய்துள்ளது. கடந்த

ஆண்டு தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற உடற்பயிற்சி அணியினரைப் பாராட்டும் விழாவிற்கான நிதியை ரூபா 60,500.00 வழங்கி இருந்தமையை இங்கு நன்றியுடன் குறிப்பிட வேண்டும். கனடா பழைய மாணவர் சங்கம் 2011 டிசம்பர் மாதத்தில் ஏற்பாடு செய்திருந்த வருடாந்த நத்தார் ஒன்றுகூடலில் 300ற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றியிருந்தமை இவர்களின் செயற்பாடுகளுக்கு சான்றாக அமைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்காக லண்டனில் இருந்து இயங்கி வரும் பழைய மாணவர் சங்கம் (St.Antony's College Kayts Alumini Association Europe) திரு. ஜோசவ் மனுவேல்பிள்ளை அவர்களின் தலைமைத்துவத்தில் சிறப்புடன் இயங்கிவருக்கின்றது. வருடாந்தம் ஒன்றுகூடல்களை நடத்துவதுடன் கல்லூரியின் வளர்ச்சிக்கு முதன்மையான பங்களிப்பை ஆற்றிவருகின்றது. குறிப்பாக பாடசாலையின் கல்வி அபிவிருத்திற்கு சிறப்பான உதவியாக தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள், அலுவலக உதவியாளர், கணினி உதவியாளர் மற்றும் சுகாதார உதவியாளர் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் இவர்களினாலேயே வழங்கப்படுகின்றன. மேலும் கணினி நிலையத்திற்கான மின்சார கட்டணத்தைச் செலுத்த உதவிபுரிவதோடு, கல்லூரியில் பெரும் குறைபாடாக இருந்த நீர்வள விருத்திக்கு உதவிபுரிந்ததன் பயனாக, புதிய நீர் இறைக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டு நாள்முழுவதும் குறைவில்லாமல் நீர் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிக்காக 2011ம் ஆண்டு மொத்தமாக ரூபா. 412,240.00 கல்லூரிக்காக வழங்கியிருந்தார்கள். அத்துடன் தரம் 10-13 வரையான மாணவர்களுக்கும் முன்மதிய உணவு வழங்குவதற்கு திரு. ஜோசவ் மனுவேல்பிள்ளை தமது பெற்றோரின் பெயரில் தனிப்பட்ட வகையில் ரூபா. 75,000.00 வழங்கி உதவி புரிகின்றார். எமது கோரிக்கைகளை மனமுவந்து ஏற்று இவ்வுதவிகளை நல்கிய லண்டனில் தலைமை கொண்டுள்ள ஐரோப்பிய பழைய மாணவர் சங்கத்திற்கு மனமார்ந்த நன்றிகளைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் கல்லூரியுடன் இணைந்துள்ள விடுதிச்சாலையில் தங்கி கல்விகற்றுவரும் சிறார்களைப் பராமரிப்பதற்கு தம்மால் இயன்ற உதவிகளை வழங்கிவருகின்றமையையும் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

தென்னிலங்கையில் செயற்படும் பழைய மாணவர் சங்கமும் (St.Antony's College, Past Pupils' Association, South Ceylon Branch) அவ்வப்போது இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது. ஊர்காவற்றுறையில் இயங்கிவரும் தாய்ச்சங்கமும் (Antonians Kayts) எப்போதும் எமக்கு அருகில் இருந்து இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது. ஆசிரியர்தினம் மற்றும் பரிசளிப்பு தினம் போன்றவற்றிற்கு அன்பளிப்புகளை வழங்கி எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்றது. கடந்த ஆண்டு உடற்பயிற்சி அணியினர் தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றச் சென்ற போது அவர்களின் பயணதிற்கு முற்பண கடனாக ரூபா. 100,000.00 வழங்கியமையை நன்றியுடன் நினைவு கூர்கின்றோம். அத்துடன் தற்போது நடைமுறையில் உள்ள பாடசாலை மேம்பாட்டுத் திட்டதில் (PSI) இணைந்து கல்லூரியின் வளர்ச்சியில் பங்கெடுத்து வருகின்றமையும் ஓர் சிறப்பம்சமாகும். தாய்ச்சங்கத் தலைவர் திரு. K. யோசவ் அவர்களுக்கு சிறப்பான நன்றிகளை இவ்வேளையில் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பெற்றோர் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சிறப்பான முறையில் செயற்பட்டுவருகின்றது. மாணவர்களுக்கான மதிய உணவுத்திட்டம், இணைபாடவிதான செயற்பாடுகள் மற்றும் தளபாட திருத்தங்கள் பராமரிப்புக்கள் ஆகியவற்றிக்கு இவர்கள் உதவிவருகின்றனர். 2011ல் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கல்லூரியின் முன்பக்க கூரையை திருத்தி அழகுபடுத்துவதற்கு உதவி அளித்தமையை இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இதற்கான நிதி முன்னாள் யாழ்மாவட்ட அரச அதிபர் திருமதி. இமல்டா சுகுமார் அவர்களின் ஆதரவுடன் துரித வடக்கு மீள்எழுச்சி (EnReP) திட்டத்தின் கீழ் பெறப்பட்டமை இங்கு குறிப்பிடப்பட வேண்டும். இத்திருத்த வேலைகளை பொறுப்பெடுத்து உரிய காலத்தில் நிறைவேற்ற உதவிபுரிந்த பழையமாணவர் திரு. இ. புனிதராஜ் அவர்களுக்கும் உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றிகள். எமது கல்லூரி வளர்ச்சிக்குப் பல உதவிகளைப் புரிந்து வரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. M.F.F. அல்பேட் அவர்களுக்கும் பொருளாளர் திரு. செ. பரராஜசேகரம் அவர்களுக்கும்

மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகளைக் கூறுவது இன்றியமையாததாகும்.

இதைத் தவிர தனிப்பட்ட முறையிலும் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் பல உதவிகளைச் செய்துவருகின்றனர். அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## சிந்தனைக்கு

மாறிவரும் உலகின் தொடர் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலும் வலிமையையும் கொண்ட புதிய சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் கடமை தற்போது பாடசாலைகளுக்கு உண்டு. அதேவேளை காலத்தின் தேவைக்கும் தொழில் சந்தையின் கேள்விக்கும் பொருத்தமான எதிர்கால சந்ததியை உருவாக்க வேண்டிய பொறுப்பும் பாடசாலைகளிடம் விடப்பட்டுள்ளது. எனவே வெறுமனே ஏட்டுக்கல்வியை மட்டும் கொண்டிராமல் தனிநபர் திறன்களை விருத்தி செய்வது ஆசிரியப் பணியின் இலக்காகும். இதனை மையமாக வைத்தே "ஆளுமையும் இறைநம்பிக்கையும் கொண்ட சமூகம்" என்ற பாடசாலை நோக்கக் கூற்றையும்,"நவீன தொழில்நுட்ப அறிவுடன் கூடிய திறன்களை வளர்த்தலும், சமய சமூக விழுமியங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட முதிர்ச்சியுடைய சமுதாயத்தினை உருவாக்குதலும்" என்ற பணிக்கூற்றையும் நாம் தெரிந்தெடுத்துள்ளோம். ஆகவே புதிய கல்விச் சிந்தனைகள், புதிய கலைத்திட்ட மாற்றங்கள் ஆகியவற்றை நன்கு உள்வாங்கி, விரைவாக மாறிக்கொண்டிருக்கும் உலகில், எமது பிள்ளைகள் நிலையானதோர் இடத்தினைப் பெற்றுக்கொள்ள, கிடைக்கின்ற சகல வளங்களையும் நன்கு பயன்படுத்திக் கொள்வதுடன், சளைக்காது கடின முயற்சி செய்வதுடன், உயர் விழுமியங்களைப் போற்றிப் பேணுகின்றவர்களாக இருப்பது, எமது எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய துணைபுரியும். எனவே நாம் எமது கல்விச் செயற் திட்டங்களில் ஒருமித்த கருத்தை கொண்டவர்களாக இருப்பதுடன், ஒன்றிணைந்த செயற்பாடுகளையும், புரிந்துணர்வுகளையும், அர்ப்பணிப்பையும், பிறரன்பையும் கொண்டிருப்பது அவசியமானதாகும்.

## நன்றிகள்

மாணவர் கல்வியிலும், கல்லூரி வளங்களிலும் பல முன்னேற்றங்களிற்கு உந்து சக்தியாகவிருந்து செயற்பட்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்சியடைகின்றேன். சிறப்பாக எமது தேவைகள் பலவற்றை அக்கறையோடு நிறைவேற்றுவதோடு எப்போதும் எமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துவருகின்ற தீவக வலயத்தின் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. V. இராதாகிருஸ்ணன் அவர்களுக்கும், எமக்கு அருகே இருந்து எமது செயற்பாடுகள் அனைத்திற்கும் தொடர்ந்து ஆதரவளித்துவரும் ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப்பணிப்பாளர் மதிப்பார்ந்த திரு. T. சோமசேகரம் அவர்கட்கும், எமது கல்வி அடைவு அபிவிருத்திற்கு பல உதவிகளைப் புரிந்துவரும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். அத்தோடு இன்றையதினம் இங்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் உயர்திரு. நீக்கிலாப்பிள்ளை யோசவ் அன்ரன் மற்றும் அவர் தம் துணைவியார் திருமதி. அன்ரனற் நிர்மலா அன்ரன் ஆகியோருக்கும், கௌரவ விருந்தினர் உயர்திரு. தியாகராஜா சோமசேகரம் அவர்களுக்கும், பொறுமையுடன் செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறி இவ்வறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

வணக்கம்.

வணபிதா. க. ஜேம்ஸ் சிங்கராயர்,
அதிபர்

20.09.2012

பரிசுகள் பெறும் மாணவர்கள் விபரம்

ஒவ்வொரு தரத்திலும் பாடரீதியாக பரிசு பெறும் மாணவர்கள்.

தரம்-06

| பாடம் | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | A.அன்ரன் லியோ | J.மில்ரன் ஜெலக்சன் | D.நிதர்சன் |
| கணிதம் | A.அன்ரன் லியோ | J.மிலோஜன் | S.சரண்ராஜ் |
| விஞ்ஞானம் | A.அன்ரன் லியோ | S.மிதுன், V.உஷாந்தன் | |
| ஆங்கிலம் | A.அன்ரன் லியோ | T.அனுராஜ் | J.மில்ரன் ஜெலக்சன் |
| வரலாறு | A.அன்ரன் லியோ | U.தனுயன் | J.மில்ரன் ஜெலக்சன் |
| புவியியல் | A.அன்ரன் லியோ | U.தனுயன் | J.மில்ரன் ஜெலக்சன் |
| வாழ்க்கைத் திறன் | A.அன்ரன் லியோ | U.தனுயன் | S.சங்கிர்த் |
| சுகாதாரம் | A.அன்ரன் லியோ | S.மிதுன் | J.மில்ரன் ஜெலக்சன் |
| செய்முறைத் தொழிநுட்பம் | S.மிதுன் | A.அன்ரன்லியோ | A.வினுஷ்ரன் |
| சைவம் | U.தனுயன், S.வினித்குமார் | ------------------ | T.லக்ஷன் |
| ரோமன் கத்தோலிக்கம் | A.அன்ரன் லியோ | J.மில்ரன் ஜெலக்சன் | J.மிலோஜன் |
| சித்திரம் | U.தனுஜன் | S.வினித்குமரன் | T.லக்ஷன் |
| சங்கீதம் | S.சரண்ராஜ் | M.கஜிமன் | A.சங்கீர்த் |
| நாடகம் | A.அன்ரன்லியோ | J.மிலோஜன் | J.மில்ரன் ஜெலக்சன் |

தரம் -07

| பாடம் | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | A.F. ஜெனிபர் | S.தேனுஜன் | K.சரன்ராஜ் |
| கணிதம் | A.F. ஜெனிபர் | R.அரிதரன் | G.றிச்மன் |
| விஞ்ஞானம் | S.தேனுஜன் | A.F. ஜெனிபர் | V.ஜிந்துஸன் |
| ஆங்கிலம் | A.F. ஜெனிபர் | S.தேனுஜன் | T.இப்ஸன்பினே |
| வரலாறு | A.F. ஜெனிபர் | S.தேனுஜன் | T. .இப்ஸன்பினே |
| புவியியல் | A.F. ஜெனிபர் | A.ஜான் ஷென்டாவிட் | G.றிச்மன் |
| வாழ்க்கைத்திறன் | A.F. ஜெனிபர் | S.தேனுஜன் | A.ஜான் ஷென்டாவிட் |
| சுகாதாரம் | A.F. ஜெனிபர் | S.தேனுஜன் | M.அபிநித் யதுஷன் |
| செய்முறைத்தொழிநுட்பம் | A.F. ஜெனிபர் | S.தேனுஜன் | K.அன்ரன் யூட்ஸன் |
| சைவம் | S.ஜிந்துசன் | S.கோபிநாத் | P.சனவக்சன் |
| ரோமன்கத்தோலிக்கம் | A.F. ஜெனிபர் | S.றிச்மன் | s.தேனுஜன் |
| சித்திரம் | A.F. ஜெனிபர் | A.ஜான் ஷென்டாவிட் | T.மஜித் |
| சங்கீதம் | S.தேனுஜன் | V.ஜிந்துஸன் | J.ருமித்ரெமில்ரன் |
| நாடகம் | G.றிச்மன் | T.ப்ஸன்பினே | K.ஜெனிஸ்ரன் |

தரம் -08

| பாடம் | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | V.சயீவன் | T.அன்ரனி அன்றூ | J.யோசப் பிரதீபன் |
| கணிதம் | A.C.J.சாள்ஸ் டிறோசன் | S.டினோசன் | V.சயீவன்<br>T.அன்ரனிஅன்றூ |
| விஞ்ஞானம் | A.C.J.சர்ள்ஸ் டிறோசன் | S.டினோசன் | V.சயீவன் |
| ஆங்கிலம் | S.டினோசன் | T.அன்ரனிஅன்றூ | A.C.J.சாள்ஸ் டிறோசன் |
| வரலாறு | A.C.J.சாள்ஸ் டிறோசன் | S.டினோசன் | V.சயீவன் |

| | | | |
|---|---|---|---|
| புவியியல் | A.C.J.சாள்ஸ் டிறோசன் | S.டினோசன் | J.யோசப் பிரதீபன |
| குடியுரிமை (Civis) | V.சயீவன் | P.விஸ்ணுராஜ் | S.டினோசன் |
| சுகாதாரம் | S.டினோசன் | A.C.J.சாள்ஸ் டிறோசன் | T.அன்ரனி அன்றூா |
| செய்முறைத் தொழிநுட்பம்(A.T) | S.டினோசன் | V.சயீவன் S.யெசிந்தன் | |
| சைவம் | V.சயீவன் | s.டினோசன் | s.ஜெசிந்தன் |
| றோமன் கத்தோலிக்கம் | A.C.J.சாள்ஸ் டிறோசன் | J.யோசப்பிரதீபன் | K.கிளின்ரன் பெர்னண்டோ |
| சித்திரம் | J.யோசப்பிரதீபன் | நிதுஷன் | றெனிசியஸ் |
| சங்கீதம் | V.சயீவன் | A.C.J.சாள்ஸ் டிறோசன் | T.அன்ரனி அன்றூா |
| நாடகம் | S.டினோசன் | K.கிளின்ரன் பெர்னாண்டோ | V.பத்மறூபன் J.கிஷோந்தன் |

தரம் -09

| பாடம் | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | J.ரஜீவன் | S.கலிஸ்ரன் ஜோன்சன் | V.கலைவாணன் |
| கணிதம் | V.கலைவாணன் | J.ரஜீவன் | S.நாகமதுசன் |
| விஞ்ஞானம் | S.நாகசுரேன் | J.ரஜீவன் | S.கலிஸ்ரன் ஜோன்சன் |
| ஆங்கிலம் | S.மேவின்யூட் | J.ரஜீவன் | V.கலைவாணன் |
| வரலாறு | V.கலைவாணன் | J.ரஜீவன் | K.விதுஜன் |
| புவியியல் | J.ரஜீவன் | G.ஜேசுதன் | M.சயந்தன் |
| A.T செயன்முறைத் தொழில்நுட்பம் | V.கலைவாணன் S.மேவின்யூட் | | S.கலிஸ்ரன் ஜோன்சன் |
| சுகாதாரம் | J.ரஜீவன் | V.கலைவாணன் | S.மேவின்யூட் |
| குடியியல் | V.கலைவாணன் | S.நாகமதுசன் | J.ரஜீவன் |
| றோமன் கத்தோலிக்கம் | V.கலைவாணன் | J.ரஜீவன் | G.ஜேசுதன் |
| சைவ சமயம் | M.சயந்தன் | S.நாகமதுசன் | A.ஜிந்துசன் |
| சித்திரம் | S.நாகசுரேன் | C.W.நிக்சன் | S.கஜன் |

| | | | |
|---|---|---|---|
| சங்கீதம் | V.கலைவாணன் | S.மேவின் யூட் | S.கலிஸ்ரன் ஜோன்சன் |
| நாடகம் | M.சயந்தன் | J.ரஜீவன் | A.ஜிந்துஜன் |

தரம் -10

| பாடம் | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | S.சதீஸ்குமார் | S.கெயின்ஸ் | A.C.J.சாள்ஸ் டிலக்சன் |
| கணிதம் | S.சதீஸ்குமார் | S.கெயின்ஸ் | A.C.J.சாள்ஸ் டிலக்சன் |
| விஞ்ஞானம் | S.சதீஸ்குமார் | A.C.J.சாள்ஸ் டிலக்சன் | S.கெயின்ஸ் |
| ஆங்கிலம் | K.சிவந்தமேனுக | S.கெயின்ஸ் | A.C.J.சாள்ஸ் டிலக்சன் |
| வரலாறு | T.ஜேராஜ் | S.சதீஸ்குமார் | S.கபிலன் |
| புவியியல் | S.சதீஸ்குமார் | S.கபிலன் | S.கெயின்ஸ் |
| வர்த்தகம் | K.சிவந்தமேனுக | நிதர்சன் | T.J.நிமல்ராஜ் |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | S.கெயின்ஸ் | S.சதீஸ்குமார் | T.ஜேராஜ் |
| மீன்பிடியியலும் உணவுத் தொழில்நுட்பமும் | A.அன்ரனிஜெனித் | கனிஸ்ரன் | P.பயஸ் |
| சைவம் | T.ஜேராஜ் | K.தனுராஜ் | S.கபிலன் |
| றோமன் கத்தோலிக்கம் | S.கெயின்ஸ் | A.C.J.சாள்ஸ் டிலக்சன | S.சதீஸ்குமார் |
| ICT | K.சிவந்தமேனுக | A.C.J.சாள்ஸ் டிலக்சன | K.தனுராஜ் |
| குடியுரிமை | T.யுகேந்திரன் | J.E.அன்ரனி | S.ஞானதீபன் |
| சங்கீதம் | தேர்வுபெறவில்லை | | |
| சித்திரம் | S.சதீஸ்குமார் | S.கபிலன் | J.சிந்துஜன் |
| நாடகம் | T.ஜேராஜ் | A.C.J.சாள்ஸ் டிலக்சன் | S.கெயின்ஸ் |

க.பொ.த (சா/த) தரத்தில் A தரச் சித்தி பெற்ற மாணவர்கள் விபரம்

| பாடங்கள் | மாணவர் |
|---|---|
| சைவ சமயம் | E. டினேசன், K. கிருஷாந், L. லிங்கேஸ்வரன், P.மாவி, S. நாககுதன், M. சுஜீவன், |
| றோமன் கத்தோலிக்கம் | P. ஆனந்தராஜன், A. டன்ஸ்ரன், K.குணப்பிரகாஸ், J. நோபேட், V.துளசிகரன், S. வசந்தராஜ், R.றெமில்டன், M.அன்ரனி நிரோஜன் |
| தமிழ் | S. நாககுதன் |
| விஞ்ஞானம் | S. நாககுதன், J. நோபேட், M. சுஜீவன் |
| கணிதம் | S. நாககுதன், J. நோபேட், M. சுஜீவன், J. சசிராஜன் |
| வரலாறு | J. நோபேட், |
| குடியுரிமை | S. நிவேன் |
| நாடகம் | A. அல்பிரட் நிமல்சன், T. ஆனந்தராஜன், K. அன்ரனி நிரோஜன், C.கிருஷ்ணநிலோஜன், K.குணப்பிரகாஸ், M. துளசிதரன் S. வசந்தராஜ்,V.துளசிகரன் |
| சங்கீதம் | S. நாககுதன் |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | பேட் நிஜாந் |
| கடற்தொழில்நுட்பவியலும் உணவும் | M. துளசிதரன் S. வசந்தராஜ், |
| சித்திரம் | அனோஜன் |

தரம் -12 கலைப்பிரிவு

| பாடம் | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | R.கஜாஜினி | A.யாழினி | P.சசீனா |
| கிறிஸ்தவம் | M.ஆனல்ட் சரண்சன் | A.யாழினி | J.அன்ரனியூட்சன் |
| இந்துநாகரிகம் | சசீனா | O.டிலக்ஸனா, T.கேஜலா | |

| | | | |
|---|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம் | R.கஜாஜினி | M.பிரதீபா | T.கேஜலா, J.பிறேமினா |
| புவியியல் | க..கோகிலன் | யாழினி | டியுலக் ஜான்சி |
| வரலாறு | O.டிலக்ஸனா | K.வேணுதீபன் | ------------------ |
| சங்கீதம் | M.பிரதீபா | த.பிறேமிளா | வ.தாரணி |
| நாடகம் | O.டிலக்ஸனா | K.யோகநேசன் | U.கஜீபராஜ் |

தரம் -12 வர்த்தகப்பிரிவு

| பாடம் | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| கணக்கீடு | J.ராஜ்றொசின்ரன் | s.அருள்ராஜ் | M.டினோசன் |
| வணிகக்கல்வி | S.யசோதரா | S.அருள்ராஜ் | A.E யூட்சன் |
| பொருளியல் | S.அருள்ராஜ் | S.யசோதரா | A.Eயூட்சன் |

தரம் - 13 கலைப்பிரிவு

| பாடம் | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | J. பிரதீகா | P. கிரிஜா | T. தர்சிகன் |
| கிறிஸ்தவம் | T. தர்சிகன் | J. வாணிப்பிரியா | L. யூட்ஸ் மயூரி |
| நாடகமும் அரங்கியலும் | K. நிருஜா | L. ஜோசப் தனுசன் | J. கரிப்பிரதாஸ் |
| இந்து நாகரீகம் | P. கிரிஜா | J. பிரதீகா | K. நிருஜா |
| அரசியல் | E. நிலாஜினி | J. பிரதீகா | T. கிருசாந், J.வாணிப்பிரியா |
| புவியியல் | T. கிருசாந், | P. கிரிஜா | P. சிவதீபன் |
| சித்திரம் | S. சிந்துஜா | R. ரஜிதரன் | A. அமிர்தஜயித் |

தரம் 13 வர்த்தகம்

| பாடம் | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| கணக்கீடு | A.அல்பிரட்நியூட்டன் | M.கிளின்ரன் | P.தியோன்சன் |
| வணிகக்கல்வி | A.அல்பிரட்நியூட்டன் | M.கிளின்ரன் | P.தியோன்சன் |
| பொருளியல் | A.அல்பிரட்நியூட்டன் | P.தியோன்சன் | M.கிளின்ரன் |

க.பொ.த (உ/த) 2011 பரீட்சையில் **A** தரசித்தி பெற்றமாணவரின் பாடரீதியான விபரம்.

| பாடம் | மாணவர் பெயர் | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் | A..அருள் பபில்ராஜ் | | | |
| தமிழ் | E.சுபாஷினி | | | |
| இந்து நாகரிகம் | E.சுபாஷினி | | | |
| கிறிஸ்தவம் | A..அருள் பபில்ராஜ் | A.யூட்பிறின்சன் | J.வெரோனிக்கா | J.தர்சன் |
| | A.டொமின்கோ | J.பகீரதன் | V.கிரிஷாந்தி | S.மரீன் யூதித் |

சிறந்த பொதுப்பரீட்சை பெறுபேற்றிற்காக பரிசு பெறும் மாணவர்கள்.

| பரீட்சை | மாணவர்பெயர் | பெறுபேறு |
|---|---|---|
| க.பொ.த (சா/த) | S.நாகசுதன் | 5A, 1B, 2C, 1S |
| க.பொ.த (உ/த) கலை | E.சுபாஷினி | 2A,B |
| க.பொ.த (உ/த) கலை | M.தர்மிகா | B, 2C |

வகுப்புரீதியாக பொதுத் தகமைக்குரிய பரிசு பெறும் மாணவர்கள்

| தரம் | பெயர் |
|---|---|
| 6 | A.அன்ரன் லியோ |
| 7 | S.தேனுஜன் |
| 8 | T.அன்ரனி அன்றூ |
| 9 | V.கலைவாணன் |
| 10 | T.சிவந்தமேனுக |
| 12 கலை | M.ஆனல்ட் சரண்சன் |
| 12 வர்த்தகம் | S.அருள்ராஜ் |
| 13 கலை | J. பிரதீகா |

கணிதபாட சிறப்புப் பரிசுபெறுவோர்

| தரம் | பெயர் |
|---|---|
| 6 | A.அன்ரன் லியோ |
| 7 | A.F.ஜெனிபர் |
| 8. | A.C.J.சாள்ஸ் டிறோசன் |
| 9 | V.கலைவாணன் |
| 10 | S.சதீஸ்குமார் |

பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தந்த மாணவர்கள்

தரம் 6 – 9
T. லக்ஸன் 7B

தரம் 10 – 13
P.F. ஆனந்தராஜன் 11B

விஞ்ஞான வினாடிவினா போட்டி 2011

| பெயர் | தரம் | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|
| ஞா.றிச்மன் | 7 | 2 | - |
| சி.தேனுஜன் | 7 | 3 | 2 |
| ஸ்ரீ.டினோசன் | 8 | 1 | - |
| சு.நாகசுரேன் | 9 | 1 | - |
| ஜெ.ரஜீவன் | 9 | 3 | - |
| ச.சதீஸ்குமார் | 10 | 1 | - |
| அ.சாள்ஸ் டிலக்சன் | 10 | 2 | - |
| சு.நாகசுதன் | 11 | 1 | - |
| மு.சுஜீபன் | 11 | 2 | 3 |

கணித வினாடி வினாப்போட்டி

ஆங்கில மொழிமூலம்

| பெயர் | தரம் | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|
| அ.அன்ரன் லியோ | 6 | 1 | 1 |
| ஜே.மில்ரன் ஜெலக்சன் | 6 | 2 | |
| தே.அனுராஜ் | 6 | 3 | |

தமிழ் மொழிமூலம்

| பெயர் | தரம் | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|
| அ.ஜெனிபர் | 7 | 1 | |
| இ.அரிதரன் | 7 | 2 | |
| ஞா.றிச்மன் | 7 | 3 | |
| ஜீ.ரஜீவன் | 9 | 2 | 1 |
| அ.சாள்ஸ் டிலக்ஸன் | 10 | 2 | |
| சு.நாகசுதன் | 11 | 2 | |
| ஜே.நோபேட் | 11 | 3 | |

சிறந்த நூலகப் பயன்பாட்டிற்காக பரிசுபெறும் மாணவர்கள்

| பிரிவு | 2011 |
|---|---|
| கீழ்ப்பிரிவு | T. இப்சன் பினே |
| மேல்ப்பிரிவு | M. பிரதீபா |

பல்கலைக் கழக அனுமதி பெற்றமைக்கான பரிசு

| பெயர் | துறை |
|---|---|
| செல்வி. இ. சுபாஷினி | கலை |
| செல்வன். அ. அருள் பவில்ராஜ் | கலை |
| செல்வி. ம. தர்மிகா | வர்த்தகம் |

விளையாட்டு முடிவுகள் 2011

தேசியமட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்ற உடற்பயிற்சி அணிவிபரம்

| பெயர் | பெயர் |
|---|---|
| 1. P.சிவதீபன் | 16. A.அனுஜன் |
| 2. K.நிதர்சன் | 17. S.கிருஸ்ணநிலோஜன் |
| 3. E.எமில்சன் | 18. J.ஜெயடக்சன் |
| 4. A.அன்பரசன் | 19. K.கோகுலன் |
| 5. J.சசிராஜன் | 20. K.கிருசாந் |
| 6. L.வேனான்சியுஸ் | 21. M.ஆனல்ட் சரண்சன் |
| 7. J.ஜேஸ்றூபன்சிதன் | 22. S.றெமில்டன் |
| 8. P.பயஸ் | 23. J.தனுசன் |
| 9. A.ஜோயஸ் | 24. K.குணராஜ் |
| 10. A.பிறின்ஸ் இனோச் | 25. P.அனிஸ்ரன் |
| 11. M.மதன்ராஜ் | 26. S.வசந்தராஜ் |
| 12. B.பிரியங்கன் | 27. K.சிவந்தமேனுக |
| 13. J.வேணுதீபன் | 28 M.மயுரன் |
| 14. S.லஸ்ரின் | 29 N.ரமேஸ்ராஜ் |
| 15. R. ரஜிதரன் | 30 C.கிறிஸ்தரன் |

சிறந்த மெய்வல்லுனர் பரிசு பெறும் மாணவர்கள்

| | |
|---|---|
| வயது - 13 | A.சு.றொனிக்சன் |
| வயது - 15 | C.W.நிக்ஸன் |
| வயது - 17 | E. கருணாலோறன்ஸ் |
| வயது - 19 | P. சிவதீபன் |
| வயது - 21 | A.யூட் பிறைன்சன் |
| வயது – 21 பெண்கள் | J. வெரோணிக்கா |

துறைசார் திறமைக்காக பரிசுபெறும் மாணவர்கள்

| | |
|---|---|
| கரப்பந்தாட்டம் | A. அமிர்தஜயித் |
| துடுப்பாட்டம் | J. டிலக்சன் |
| பூப்பந்தாட்டம் | S. அருள்ராஜ் |
| உடற்பயிற்சி | E. எமில்சன் |
| சதுரங்கம் | M. டினோசன் |
| கரம் | S. ஜோன் கீற்ஸ் |
| உதைபந்தாட்டம் | J. றொகான் |
| சகலதுறை | P. சிவதீபன் |
| சாரணியம் | S. அருள்ராஜ் |
| சென்.ஜோண்ஸ் அம்புலன்ஸ் | V. றொஜீவன் |

2011 ம் ஆண்டின்

கல்லூரியின் சிறந்த மாணவன்

**Antonian of the year 2011**

**Mass. Pannirselvam Sivathapan**

2011 ம் ஆண்டின்

கல்லூரியின் சிறந்த ஆசிரியர்

**Staff of the year 2011**

**Miss. Ajanthamala Ariyanayagam**

| Year | Antonian of the Year | Staff of the Year |
|---|---|---|
| 2002 | Mas.A.AnistanJeyakumar | Mr.P.W.Navarajah |
| 2003 | Mas.J.J.Kirisenthira | Mr.S.Sathananthan |
| 2004 | Mas.R.Anosanth | Mrs.C.P.S.W.Navarajah |
| 2005 | Mas.K.Puvi | Mrs.P.Theva |
| 2006 | Mas.G.A.Lintan Jathees | Mr.K.Kiyomar |
| 2007 | Mas.E.G.Luxman | Miss.A.Arulanantham |
| 2008 | Mas.N.Kishanraj | Mr.S.Jasotharan |
| 2009 | Mas.A.Babilraj | Miss.N.Nadarajah |
| 2010 | .................... | Mrs.S.Thirumaran |

புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொள்ள புதிதாக இணைந்து கொண்டமைக்காக பரிசு பெறும் மாணவர்கள்

| பெயர் | புலமைப்பரிசில் |
|---|---|
| சு.றொக்சன் | சிப்தொறா |
| தே.தாரணி | சிப்தொறா |
| வி.விஜிதா | சிப்தொறா |
| அ.பிரதீபா | சிப்தொறா |
| ம.கிருபாஜினி | சிப்தொறா |
| க.சுவேதா | சிப்தொறா |
| நீ.நிஜிஸ்ரன் | சிப்தொறா |
| வ.கஜன் | சிப்தொறா |
| ஸ்.ஜோன்கீற்ஸ் | சிப்தொறா |
| க.கங்கா | சிப்தொறா |

## சனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள்

1. S.அருள்ராஜ்
2. R.வேணுதீபன்
3. S.ஜோன் கீற்ஸ்
4. K.விஜேந்திரன்
5. J.ராஜ் ரொசின்ரன்
6. M.பிரதீபா
7. T.கேஜலா
8. S.யசோதரா
9. A.டிலுக்சன்
10. J.பிரேமினா
11. P.சசீனா
12. Y.யாழினி
13. K.குபேந்தினி
14. I.மேரி பவுஸ்ரீனா ரஸ்மி
15. M.கிருபாஜினி
16. T.தாரணி
17. A.யாழினி
18. J.அன்ரன் யூட்சன்
19. V.கஜன்

## பெருவிளையாட்டுக்கள் 2011

| பிரிவு | கரம் | உதை பந்து | கரப் பந்து | கிரிக் கெட் | பட்மின் ரன் | சதுரங் கம் | உடற் பயிற்சி |
|---|---|---|---|---|---|---|---|
| 15 வயது | கோ- 2<br>வ- 3 | கோ-1<br>வ -1 | கோ-1<br>வ- 1 | | | கோ— 1<br>வ - 2 | |
| 17 வயது | கோ-1<br>வ -1 | கோ-1<br>வ -1 | கோ-1<br>வ- 1 | | கோ-1<br>வ- 1 | கோ-2<br>வ- 3 | கோ-1<br>வ- 1 |
| 19 வயது | கோ-1<br>வ -1 | கோ-1<br>வ -1 | கோ-1 | கோ-1<br>வ- 1 | கோ-1<br>வ- 1 | கோ-2<br>வ- 2 | மாவ-2<br>மாகா-2<br>தேசி-1 |

### மெய்வல்லுனர்

| கோ.மட்டமுடிவு | வலயமட்டமுடிவு | மாவட்டமுடிவு | மாகாணமுடிவு |
|---|---|---|---|
| 1ம்இடங்கள்- 56<br>2ம்இடங்கள்- 37<br>3ம்இடங்கள்- 08 | 1ம்இடங்கள்- 31<br>2ம்இடங்கள்- 12<br>3ம்இடங்கள்- 10 | 1ம்இடங்கள்- 03<br>2ம்இடங்கள- 03<br>3ம்இடங்கள்- 02 | 1ம்இடங்கள்- 02<br>2ம்இடங்கள்- 01<br>3ம்இடங்கள்- 02 |

கோ- கோட்டமட்டம் வ- வலயமட்டம் தே-தேசியமட்டம்
மாவ- மாவட்டமட்டம் மா- மாகாணமட்டம்

## English Day 2011

| Division / Name | Grade | Recitation | Copy Writing | Creative Writing | Story Telling | Dictation | Oratory | Reading | Solo Acting | Role Play |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A.Anton Leo | 6 | | | D-1 | | | | D-3 | | |
| A.G.Jenifer | 7 | | | | | D-2 | | | | |
| M.Apinith Jathusan | 7 | | D-1 | | | | | | | |
| G.Richman | 7 | | D-3 | | | | | | | |
| S.Thenujan | 7 | | | D-1 | | | | | | |
| T.Antony Antrow | 8 | | D-3 | | | | | | | |
| J.Rajeevan | 9 | | | | | D-3 | | | | |
| S.Mervin Jude | 9 | | D-3 | D-1<br>Z-2 | D-3 | | | D-1 | | |
| T.Sivantha Menuga | 10 | | D-3 | | | | | D-1 | | |
| S.Keins | 10 | | | D-2 | | | | | | |
| A.Diluxsan | 10 | | | D-3 | | | | | | |
| A.Dunstan | 11 | D-2 | | | | | | D-3 | | |
| J.Norbet | 11 | | | D-3 | | | | | | |
| B.Saseena | 12 | | | D-2 | | D-1<br>Z-3 | | | | |
| J.Premina | 12 | | | | | D-3 | | | | |
| A.Diluxsana | 12 | | | | | | | D-1<br>Z-2 | | |
| K.J.Jenod | 12 | | | D-3 | | | | | | |
| K.Suvetha | 12 | | | | | | D-2<br>Z-3 | | | |
| F.X.Golgin Dias | 13 | | | D-3<br>Z-3 | | D-1 | | | | |
| P.Kiriya | 13 | | | | | | | D-3 | | |
| J.Veronika | 13 | | | | | | D-1<br>Z-1 | | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S.Arrulraj | 13 | | | | | | | | Z-1 | |
| M.Kirubagini | 13 | | | | | | | | Z-2 | |
| J.Sinthuja | 13 | | | | | | | | Z-2 | |
| S.Mery Kema | 13 | | | | | | | | Z-3 | |

Z - Zonal

தமிழ்த்தினப் போட்டி 2011

| நிகழ்ச்சி | பெயர் | பிரிவு | கோட் | வலய | மாவ | மாகா |
|---|---|---|---|---|---|---|
| கட்டுரை | பா.தர்சிகா | 5 | | 3 | | |
| கவிதை | இ.சுபாஷினி | 5 | | 1 | | |
| சிறுகதை | ம.ஆனல்ட் சரண்சன் | 4 | | 2 | | |
| வாசிப்பு | தே.அன்ரனி அன்றூ | 2 | 1 | | | |
| பேச்சு | ஸ்ரீ.டினோசன் | 3 | 1 | 2 | | |
| | செ.அருள்ராஜ் | 4 | 1 | 1 | | |
| | அ.அல்பிரட் நியூட்டன் | 5 | 1 | 2 | | |
| பாவோதல் | ஜ.ரஜீவன் | 3 | 1 | 1 | | |
| தனிஇசை | சி.தேனுஜன் | 3 | 1 | 1 | | |
| | யெ.பிறேமினா | 5 | | 2 | | |
| நாட்டார் பாடல் | குழு | 1 | 1 | 1 | | |
| வில்லுப் பாட்டு | குழு | | | | | |
| இலக்கிய நாடகம் | குழு | 1 | 1 | 1 | | |
| தமிழறிவு வினாவிடை | குழு | 1 | 1 | 1 | | |
| விவாதம் | குழு | 1 | 1 | 1 | | |
| இசை நாடகம் | குழு | 1 | 1 | 1 | 1 | 2 |

## தமிழ் தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பிலுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்க
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே

## COLLEGE ANTHEM

Let's sing this tuneful Anthem hearty
Sing it loud with heart sincere.
True to Christ, our School and country,
Onwards we shall march secure.

***Chorus***

*Give the utmost for the highest,*
*Let that always be our aim.*
*Strive to gain from life the fullest,*
*For that's real fame.*

Rally round the Alma Mater,
Loyal, honest, faithful and kind,
Men of truth and men of honour,
Strong in body, sprit and mind.

***Chorus***

*Give the utmost for the highest,*
*Let that always be our aim.*
*Strive to gain from life the fullest,*
*For that's real fame.*


THANK YOU